**நியதிகளும் நிபந்தனைகளும் - Savings Pot**

FriMi ஊடாக ஆரம்பிக்கப்படுகின்ற அனைத்து Savings Pot கணக்குகளையும் பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் நிர்வகிக்கும்.

**கீழே “ஏற்றுக்கொள்க” என்ற பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருமாறு ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார்:**

இந்நியதிகளும் நிபந்தனைகளும் Savings Pot உற்பத்தி தொடர்பிலான விபரங்களுடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அத்துடன் அத்தகைய விபரங்களை வாடிக்கையாளர் வாசித்து புரிந்துகொண்டுள்ளார் என்றும் அவற்றின் மூலம்கட்டுப்பட்டு இணங்கி சம்மதிக்கின்றார் என்றும்:

Savings Pot **கணக்கை ஆரம்பித்தல்**

1. Savings Pot கணக்கு, “உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்” படிவம் (KYC படிவம்) உறுதிப்படுத்தல்களை நிறைவுசெய்வதை அ னு சரித்து வங்கியினால் செயற்படுத்தப்பட்டுள்ள FriMi சேமிப்பு கணக்கொன்றை கொண்டுள்ள வாடிக்கையாளர் மூலம் ஆரம்பிக்கப்படலாம்.

2. Savings Pot கணக்கு, FriMi செயலி ஊடாக மாத்திரம் திறக்கப்படக்கூடியதாகும்.

3. வாடிக்கையாளர், FriMi செயலி ஊடாக உயரந்தபட்சம் ஐந்து (05) Savings Pot கணக்குகள் உருவாக்கலாம் (வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் வங்கியினால் வேறு வகையில் திருத்தப்பட்டாலன்றி).

4. இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதன் மூலம், வங்கிக்கு வாடிக்கையாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள மிகவும் அண்மைய உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் படிவத்தின் (KYC படிவம்) விபரங்களை பயன்படுத்தி வாடிக்கையாளரின் பெயரில் Savings Pot கணக்கொன்றினை/கணக்குகளை ஆரம்பிப்பதற்கு வாடிக்கையாளர் சம்மதிப்பதுடன் மற்றும் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார் ˙.

5. Savings Pot கணக்கொன்றுக்கான வரவுகளும் பற்றுகளும் FriMi சேமிப்பு கணக்கிலிருந்து Savings Pot கணக்கிற்கும் அத்துடன் மறுதலையாகவும் மாற்றல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்

6. ஒவ்வொரு Savings Pot கணக்கும் FriMi யில் பேணப்படுகின்ற கணக்குகள் வகையினுக்குள் வகைப்படுத்தப்படுவதுடன் Savings Pot கணக்குகள் தொடர்பில் ஏற்புடையதாகவிருக்கும் வட்டி வீதமும் வரிகளும் FriMi செயலியில் வெளியிடப்படும்.

7. Savings Pot கணக்குகளில் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச வைப்புத் தொகை எதுவும் கிடையாது.

8. Savings Pot கணக்கு ஆரம்பிக்கும் நாணயம் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

9. Savings Pot கணக்கு தனிப்பட்ட கணக்குகளாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

10. Savings Pot கணக்குகளுக்காக வாடிக்கையாளருக்கு இலத்திரனியல் கணக்கு கூற்றுகள் வழங்கப்படாது. செயற்பாட்டிலுள்ள வங்கி கட்டணங்களுக்குட்பட்டு காகித அடிப்படையிலான கணக்கு கூற்றுகள் கோரிக்கையின் மீது மாத்திரம் வழங்கப்படும்.

11. வாடிக்கையாளர், FriMi செயலியூடாக Savings Pot கணக்குகளுக்கான கொடுக்கல்வாங்கல் விபரங்களைப் பார்வையிடலாம்.

**SAVINGS POT கணக்குகளை முடிவுறுத்தல்**

12. வாடிக்கையாளர், Savings Pot கணக்கை ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் மூடலாம் என்பதுடன் கணக்கில் உள்ள அனைத்து நிதியங்களும், தன்னியக்கமாக FriMi சேமிப்பு கணக்கிற்கு மாற்றல்செய்யப்படும்.

13. வாடிக்கையாளருக்கு அறிவித்தலை வழங்கி Savings Pot கணக்கினை மூடுவதற்கும் அத்துடன் அத்தகைய மூடுதலின் மீது அதிலுள்ள பணத்தொகைகளை FriMi சேமிப்பு கணக்கிற்கு மாற்றல்செய்யபடுவதற்கும் வங்கி உரிமையினை கொண்டிருக்கும்.

**இதர தகவல்கள்**

14. இதிற் குறிப்பிடப்பட்டவைக்கு முரணாக எதுஎவ்வாறிருப்பினும், வங்கியானது வங்கிக்கான வாடிக்கையாளரின் எவையேனும் பொறுப்புகளை வாடிக்கையாளரின் Savings Pot கணக்குடன் ஒன்றுசேர்த்து அத்தகைய பொறுப்புகள் உண்மையாயினும் சரி அல்லது எதிர்பாராதவையாயினும் சரி, முதன்மையானதும்சரி அல்லது பிணைய உறுதி உடையதாயினும்சரி அத்துடன் பலதாக அல்லது ஒருமித்ததாக இருப்பதாயினும் சரி ஏதேனும் வேறு கணக்கு மீது அல்லது வேறு ஏதே னு ம் விடயத்தில் வங்கிக்கு வாடிக்கையாளரிடமிருந்து கடனாகசெலுத்த வேண்டிய வேறு தொகைக்கு/தொகைகளுக்கு Savings Pot சேமிப்புக் கணக்கின் வரவிற்கான ஏதேனும் தொகையினை/நிலுவையினை எதிரீடுசெய்வதற்கு அல்லது மாற்றல்செய்வதற்கு வாடிக்கையாளர் சம்மதமளித்து வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

15. வங்கி, எந்நேரத்திலும் இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கு தானாக உரிமையினை கொண்டிருக்கும். அத்தகைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

16. இதில் வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டாலன்றி, இந்நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய எழுத்துக்களினான சொற்பதங்கள் வாடிக்கையாளரினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட FriMi நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ("பிரதான ஒப்பந்தம்") கொண்டிருக்கும் அதே பொருளை கொண்டிருக்கும்.

17. இந்நியதிகளும் நிபந்தனைகளும் பிரதான ஒப்பந்தம் மற்றும் வங்கியின் பொதுவான தொழில் நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் ஏ ற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் (இவற்றின் பிரதிகள் கோரிக்கையின் பேரில் கிடைக்கப்பெறுகின்றன). அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இதில் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலும் சரி கூட்டிணைக்கப்படவில்லையாயினும் சரி என்பதனை பொருட்படுத்தாது வாடிக்கையாளர் அனைத்து அத்தகைய நியதிகளாலும் நிபந்தனைகளாலும் கட்டுப்படுத்தப்படுவார்.

வரைவிலக்கணங்கள்

"வங்கி" என்பது நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி (PQ 118) என்பது பொருளாகும்.

“Savings Pot கணக்கு’’ என்பது வாடிக்கையாளர்களுக்கான தெரிவு அம்சம் ஒன்றாகக் கிடை க்கப்பெறுகின்ற நேஷன்ஸ் சேவர் சேமிப்பு கணக்கொன்றின் வகையின் கீழ் வருகின்ற வங்கியின் ஒரு சேமிப்பு கணக்கு தயாரிப்பு என்பது பொருளாகும்.

“KYC” என்பது உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்என்பது பொருளாகும்.